**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.</u>**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், மாசி திங்கள் 25 ஆம் நாள்)

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 599/2025</u>**

**<u>CNR.No.TNTI17-002658-2025</u>**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக, காவல் ஆய்வாளர், உடுமலைப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண்.729/2025 |
| //எதிர்// | | |
| எதிரி | – | சிவக்குமார் (28/2025),<br>த/பெ. கண்ணன்,<br>14/334, J.J. நகர், பெரியகோட்டை பிரிவு,<br>உடுமலைப்பேட்டை (தா), திருப்பூர்(மா). |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரிகள் மீது பிரிவு 303(2) BNS –ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரிகள் மீது பிரிவு 303(2) BNS –ன் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவுகள் 303(2)–ன் கீழ் வனையப்பட்ட குற்றத்திற்கு குறைந்தபட்ச தண்டனையாக ஆறு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் எதிரியானவர் சிறைச்சாலையில் உள்ளதை கருத்திற்கொண்டும் அபராதம் விதிக்கப்படாமலும் இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்கண்ட தண்டனை தீர்ப்பானது, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 271(2)–கீழ் வழங்கப்படுகிறது. மேலும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 468–ன் கீழ் இவ்வழக்கின் எதிரியானவர் 22.11.2025 ஆம் தேதி முதல் 09.03.2026 வரை (108 நாட்கள்) சிறையில் இருந்த காலத்தினை தண்டனைக் காலத்தில் கழித்துக் கொள்ளவும் இந்நீதிமன்றம் உத்திரவிடுகிறது. |
| புகார் நாள் | – | 21.11.2025 |

| | | |
|---|---|---|
| கைது செய்யப்பட்ட நாள் | – | 22.11.2025 |
| பிணையில் சென்ற நாள் | – | 09.03.2026 |
| கோப்பு நாள் | – | 12.12.2025 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 02.03.2026 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 04.03.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 09.03.2026 |

இவ்வழக்கானது 12.12.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.V.மாரிமுத்து, B.A., LLB., அவர்கள் முன்னிலையாகியும் இருந்திட்ட இவ்வழக்கில் அனைத்து ஆவணங்களையும், சாட்சியங்களையும், பரிசீலனை செய்த பின்னரும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்தளிக்கும்,

## தீர்ப்புரை

எதிரிகள் மீது உடுமலைப்பேட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற எண்.729/2025 ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு :

1) வாதி செல்வகுமார் என்பவர் உடுமலைப்பேட்டை – பழனி ரோடு புரோபஷனல் கொரியல் எதிரில் GENUINE AUTO CARE என்ற பெயரில் ஆட்டோ கன்சல்டிங் வைத்து தன் கடையில் பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனங்களை வாங்கி விற்பனை செய்து வருகிற நிலையில் கடந்த 15.11.2025 ஆம் தேதி மாலை வாதி மேற்படி தன் கடையில் இருந்தபோது வந்த பச்சை கலர் டீசர்ட் மற்றும் கருப்பு கலர் ஜீன்ஸ் அணிந்து வந்த எதிரி சிவக்குமார் என்பவர் வாதியிடம் தனக்கு இருசக்கர வாகனம் வேண்டும் என்று கேட்டு வாகனங்களை பார்த்துக் கொண்டு நின்று இருந்தவர் வாதி வேறொரு வாடிக்கையாளருக்கு

இருசக்கர வாகனத்தை விலை பேசிக்கொண்டிருந்த சமயத்தில் தனது சுயலாபத்திற்காக திருட வேண்டும் என்ற நோக்கத்துடன் வாதி விற்பனைக்காக சம்பவ இடமான மேற்படி கடையின் முன்பாக நிறுத்தி வைத்திருந்த TN 78 S 9225 என்ற எண்ணுள்ள கருப்பு சிவப்பு கலர் பஜாஜ் பல்சர் NS–160 இருசக்கர வாகனத்தை கடந்த 15.11.2025 ஆம் தேதி மாலை 03.00 மணிக்கு திருடி சென்று வாதிக்கு இழப்பை ஏற்படுத்திய குற்றத்திறகாக எதிரி மீது உடுமலைப்பேட்டை காவல் ஆய்வாளர் பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 303(2)–ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) அழைப்பாணையின் பெயரில் இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 303(2)–ன் கீழான குற்றத்திற்கான முதல் நோக்கு முகாந்தரம் இருப்பதாக நீதிமன்றம் திருப்தியுற்றதால் பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா 2023, பிரிவு 263–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் படித்துக்காட்டி விளக்கம் கேட்டபோது இவ்வழக்கின் எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்து தான் குற்றவாளி அல்ல என தெரிவித்தார். மேலும் தன் மீது போடப்பட்ட வழக்கை விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய அரசு தரப்பில் வழிவகை செய்யப்பட்டது.

3) எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 08 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு 06 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்</u>:

4) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 செல்வக்குமார் என்பவர் Genuine Auto Care என்ற பெயரில் பழனி ரோட்டில் ஆட்டோ கன்சல்டிங் கடை நடத்தி

வருகிறார். அ.சா.2 ஆனவர் பயன்படுத்திய இரு சக்கர வாகனத்தை வாங்கி விற்கும் வேலை செய்து வருகிறார். கடந்த 15.11.2025ம் தேதி மாலை 03.00 மணியளவில் அ.சா.1ன் கடைக்கு மஞ்சள் கலர் சட்டை அணிந்து கருப்பு கலர் ஜீன்ஸ் அணிந்து வந்த ஒரு நபர் வண்டி வேண்டும் என்று கூறியுள்ளார். அப்போது வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருந்ததால் காத்திருக்குமாறு கூறியுள்ளார். பின்னர் 10 நிமிடம் கழித்து மேலாளர் நவின் என்பவர் அ.சா.1யிடம் வந்து அந்த நபர் பல்சர் NS 160 வாகனத்தை எடுத்து செல்வதாகவும் வண்டி பேசி விட்டிர்களா என்று கேட்டுள்ளார். அ.சா.1 ஆனவர் பேசவில்லை, வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருந்ததால் 10 நிமிடம் காத்திருக்க சொன்னேன் என்று கூறியுள்ளார். பல்சர் NS 160 வாகனத்தின் எண் TN 78 S 9225 ஆகும். பார்ட்டி வந்தால் காண்பிப்பதற்காக சாவி வண்டியிலேயே இருந்துள்ளது. அந்த நபர் லோக்கல் என்றும், தன் பெயர் சிவக்குமார் என்றும் கூறியதாகவும் சொல்லியுள்ளார். ஏற்கனேவே நண்பர்களுடன் ஒரு சில மாதங்களுக்கு முன் கடைக்கு வந்திருந்தார். பின்னர் அவர் லோக்கல் என்று சொன்னதால் கடையில் உள்ள நபர்களை வைத்து தேடியுள்ளார். மறுநாள் அவரது ஊர் பெரிய கோட்டை பிரிவு என்று தகவல் கிடைத்து, அவர் வீட்டிற்கு சென்று விசாரித்த போது சிவக்குமார் வீட்டிற்கு வருவதில்லை என்று கூறியுள்ளார்கள். அதனால் அக்கம் பக்கம் தேடிவிட்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார். புகாரில் உள்ள கையெழுத்து அ.சா.1 உடையது தான். புகார் அ.சா.1ன் மேலாளர் நவின் என்பவர் எழுதியது. புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் வண்டி அடுத்த நாள் கிடைத்து விட்டதாக சொல்லியுள்ளார்கள். மேற்படி வண்டி எடுத்தவரை அடையாளம் காட்ட இயலும் என்றும், நீதிமன்றத்தில் ஆஜரான எதிரி தான் என்றும், புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் அ.சா.1ன் கடையில் இருந்து திருடி சென்ற வாகனம் என்றும் கூறியுள்ளார். வாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) அ.சா.2 நவின்பிரபு என்பவர் Genuinue Auto Care என்ற பெயரில் பழனி ரோட்டில் ஆட்டோ கன்சல்டிங் கடையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறார். அசா.1 கடையின் உரிமையாளர் பயன்படுத்திய இரு சக்கர வாகனத்தை வாங்கி விற்கும் வேலை செய்து வருகிறார். கடந்த 15.11.2025ம் தேதி கடையின் உரிமையாளர் வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருந்த போது வேறு அலுவலில் இருந்து கடைக்கு வந்த போது கடைக்கு வெளியே ஆஜர் எதிரி சிவக்குமார் நின்று கொண்டிருந்துள்ளார். பல்சர் NS–160 TN 78 S 9225 வாகனத்தை எடுத்து, ஓட்டிப் பார்ப்பதாக சொல்லியுள்ளார்.

6) பின்னர் உரிமையாளரிடம் போய் சொன்ன போது வேறு வாடிக்கையளாரை பார்த்து கொண்டிருப்பதாக 10 நிமிடம் காத்திருக்குமாறு கூறியதாக கூறியுள்ளார். ஆனால் அதற்குள் வண்டியை எடுத்து சென்று விட்டார். 10 நிமிடம் காத்திருந்தபோதும் அவர் வரவில்லை, ஆஜர் எதிரி லோக்கல் என்று சொன்னார், அந்த நபர் தன் பெயர் சிவக்குமார் என்று கூறினார், ஏற்கனேவே நண்பர்களுடன் ஒரு சில மாதங்களுக்கு முன் கடைக்கு வந்திருந்தார் என்றும் கூறியுள்ளார். பின்னர் அவர் லோக்கல் என்று சொன்னதால் கடையில் உள்ள நபர்களை வைத்து தேடியுள்ளார். மறுநாள் அவரது ஊர் பெரிய கோட்டை பிரிவு என்று தகவல் கிடைத்து, அவர் வீட்டிற்கு சென்று விசாரித்த போது சிவக்குமார் வீட்டிற்கு வருவதில்லை என்று கூறியுள்ளார்கள். அதன் பிறகு 21ம் தேதி கடையின் உரிமையாளர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார். புகாரை அசா.1 சொல்ல சொல்ல அ.சா.2 எழுதியுள்ளார். அசா.ஆ.1ல் உள்ள கையெழுத்து அ.சா.2 உடையது தான். போலிசார் விசாரித்தார்கள், மறுநாள் 22 ம் தேதி வாகனம் கிடைத்து விட்டதாக போலிசார் சொல்லியுள்ளார்கள்.

7) அ.சா.3 ஜனார்த்தனன் என்பவர் Genuine Auto Care என்ற பெயரில் பழனி ரோட்டில் உள்ள கடையில் வேலை செய்து வருகிறார். கடந்த 21.11.2025ம் தேதி அ.சா.1 தனது ஓனர் பைக் திருட்டுசம்பந்தமாக புகார் கொடுத்திருந்தார், அது

சம்பந்தமாக போலிசார் கடைக்கு வந்து மேப் போட்டதாகவும், கடை விவரங்களை எழுதி கொண்டதாகவும், அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டதற்கு அ.சா.3 ம், செல்லதுரையும் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.3 உடையது தான். பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) அ.சா.4 சிவக்குமார் என்பவர் திருப்பூர் தொழில் பாதுகாப்பு குழுவில் மேலாளராக வேலை செய்து வருவதாகவும், கடந்த 22.11.2025 ம் தேதி காலை 8.30 மணிக்கு அ.சா.4 ம், அவரது நண்பர் அன்பரசன் என்பவரும் இரு சக்கர வாகனத்தில் குணஸ்ரீ லாட்ஜ் அருகில் வந்த போது போலிசார் வாகனங்களை நிறுத்தி வாகனத்தை சோதனை செய்து கொண்டிருந்துள்ளார்கள். பின்னர் அ.சா.4 ன் வாகனத்தையும் நிறுத்தி வாகனத்தின் ஆர்சி புக், இன்சூரன்ஸ் லைசன்ஸ் ஆகிய விவரங்களை கேட்டதற்கு எடுத்து காண்பித்துள்ளார்கள். அப்போது ஒரு பல்சர் வாகனம் வேகமாக வந்து, போலிசாரை பார்த்ததும் வேகமாக சென்றதை போலிசார் தடுத்து நிறுத்தி அந்த வாகனத்தில் வந்தவரிடம் ஆர்சி புக், இன்சூரன்ஸ் லைசன்ஸ் ஆகிய விவரங்களை கேட்ட போது அவர் தடுமாறிவிட்டு அந்த வாகனத்தை திருடி கொண்டு வந்ததாக ஒப்பு கொண்டுள்ளார். அவர் பெயர் சிவக்குமார் என்றும் பெரியகோட்டை பிரிவு என்றும் சொன்னதாகவும், ஆஜர் எதிரி தான் அவர் என்றும் சொல்லியுள்ளார்.

9) பின்னர் போலிசார் எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கேயே லேப்டாப்பில் தட்டச்சு செய்து பெண்டிரைவ் மூலமாக பிரவுசிங் சென்டருக்கு சென்று பிரிண்ட் அவுட் எடுத்து வந்து எதிரியிடம் கையொப்பம் பெற்றுள்ளார்கள். அ.சா.4 ம், அன்பரசனும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். எதிரி 4 கையெழுத்து செய்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.4 உடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. படிவம் 91ல் இடமிருந்து வலத்தில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.4 உடையது தான்.

படிவம் 91 அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.4 ன் முன்னிலையில் பல்சர் பைக்கை எதிரி ஆஜர் படுத்தியுள்ளார்.

10) அ.சா.5 மணிமேகலை என்பவர் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது கடந்த 21.11.2015 ம் தேதி 16.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்த போது செல்வக்குமார் த/பெ. காளியப்பக்கவுண்டர் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண்.729/2025 ச/பி.303(2) BNS–ன் கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்து அசலை நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் கோபால் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவல் உதவி ஆய்வாளர் இது சம்பந்தமாக விசாரித்துள்ளார்.

11) அ.சா.6 கோபால் என்பவர் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவகிறார். கடந்த 21.11.2025 ம் தேதி தலைமை காவலர் மணிமேகலை பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே மாலை 17.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்லதுரை மற்றும் ஜனார்த்தனன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மாதிரி வரைபடம் அசா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12) பின்னர் சாட்சிகள் செல்வகுமார், நவீன் பாபு, ஜனார்த்தனன், ஆகியோரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்த நிலையில், வழக்கின் எதிரியை தணிக்கை செய்தும் எதிரி பழம் குற்றவாளி என்ற நிலையிலும் கடந்த 22.11.2025 ஆம் தேதியன்று உடுமலைப்பேட்டை – பழனி ரோடு குண ஸ்ரீ லாட்ஜ் அருகில் வாகன தணிக்கையில் இருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் தங்களை

பார்த்ததும் தப்பியோட முயற்சித்தவரை உடனிருந்த போலீஸ் பார்ட்டியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயர் சிவக்குமார் என்றும் தகப்பனார் பெயர் கண்ணன் பெரியகோட்டை பிரிவு என்றும் கூறியவர் பின்னர் ஜெனியும் ஆட்டோ கேர் கடையில் இருந்த வாகனத்தை திருடியதாக ஒப்புக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சிவக்குமார் அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து அவர் திருடி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை ஆஜர்படுத்தியதை படிவம் 91 மூலம் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார்.

13) மேலும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரியை திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கு சொத்தை படிவம் 91 மூலமாக அனுப்பி வைத்துள்ளார். வாதி செல்வகுமார் என்பவரை விசாரித்து மறு வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மணிமேகலை என்பவரை விசாரித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

14) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் எதிரியிடம் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 351(1) (ஆ)–ன் கீழ் விளக்கி விசாரணை செய்தபோது எதிரி தனக்கு எதிரான அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்துரைத்துள்ளார். மேலும் தான் நிரபராதி எனவும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

15) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட வாய்மொழிச் சான்றுகள் மற்றும் ஆவணச்சான்றுகள் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பால் நிரூபணம் செய்து விட்டதாகவும், அதனால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டுமென்று வாதிட்டார்.

16) எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது இவ்வழக்கில் சிசிடிவி கேமரா பதிவுகளை தாக்கல் செய்யவில்லை என்றும், வாதியின் பெயரும், எதிரியின் பெயரும் சிவக்குமார் என்று சாட்சிகளின் 180(3) வாக்குமூலத்தில் காணப்படுகிறது என்றும், மேற்படி வாகனம் வாதியினுடையது என்பதைக் காட்ட மேற்படி வாகனத்தின் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் புள்ளி விவர கணக்கிற்காக உங்களிடம் புகாரைப் பெற்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே ஒருபோதும் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமாய் வாதிட்டார்.

**பிரச்சனையும் தீர்வும்**

17) இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதே இவ்வழக்கின் தீர்வுக்கான பிரச்சனை ஆகும்.

18) இந்நிலையில் மேற்படி சம்பவ தினம் மற்றும் சம்பவ நேரம் மற்றும் சம்பவ இடத்தைப் பொறுத்து அ.சா.ஆ.1 ஆன புகாரைப் பரிசீலிக்கையில் உடுமலைப்பேட்டை – பழனி ரோடு புரோபஷனல் கொரியல் எதிரில் GENUINE AUTO CARE என்ற பெயரில் ஆட்டோ கன்சல்டிங் கடை 6 வருடமாக வைத்து நடத்தி வருவதாவும், கடந்த 15.11.2025 ஆம் தேதி சாயங்காலம் 03.00 மணிக்கு கடையில் இருந்தபோது எதிரியானவர் இருசக்கரம் பார்க்க வந்ததாகவும் அதன் பின்னிட்டு இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு, அவ்வாறே அ.சா.ஆ.6 ஆன முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

19) இதனை பொறுத்து அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில் அ.சா.1 ஆனவர் தனது சாட்சியத்தில் Genuine Auto Care என்ற பெயரில் பழனி ரோட்டில் ஆட்டோ கன்சல்டிங் கடை நடத்தி வருவதாகவும், கடந்த 15.11.2025 ம் தேதி மாலை 03.00 மணியளவில் இவ்வழக்குச் சம்பவம் நடைபெற்றதாக தனது புகாருக்கு ஒத்துப் போகும் வகையில் கூறியுள்ளார்.

20) மேலும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ன் முதல் விசாரணையில் Genuinue Auto Care என்ற பெயரில் பழனி ரோட்டில் ஆட்டோ கன்சல்டிங் கடையில் மேலாளராக பணிபுரிந்து வருவதாகவும், அசா.1 மேற்படி கடையின் உரிமையாளர் என்றும், கடந்த 15.11.2025 ம் தேதி கடையின் உரிமையாளர் வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரியானவர் மேற்படி வானத்தைத் திருடிச் சென்றார் என்று கூறியுள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் உள்ள தூரம் எவ்வளவு என்றால் சுமார் 1 கிமீ இருக்கும் என்றும், சம்பவ சமயத்தில் கடையில் தான் இருந்தேன் என்றும், சுமார் 10 பேர் கடையில் வேலை செய்து வருவார்கள் என்றால் 6-7 பேர் வேலை செய்கிறார்கள் என்றும் கூறியுள்ளார்.

21) மேலும், அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரி தனது முதல் விசாரணையில் கடந்த 21.11.2025 ம் தேதி அ.சா.5 ஆன தலைமை காவலர் மணிமேகலை பதிவு செய்த அ.சா.ஆ.6 ஆன முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே மாலை 17.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்லதுரை மற்றும் ஜனார்த்தனன் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.3 ஆன பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார்.

22) இந்நிலையில் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ன் முதல் விசாரணையில் Genuine Auto Care என்ற பெயரில் பழனி ரோட்டில் உள்ள

கடையில் வேலை செய்து வருவதாகவும், கடந்த 21.11.2025 ம் தேதி தனது ஓனர்(அ.சா.1) பைக் திருட்டுசம்பந்தமாக புகார் கொடுத்திருந்ததாகவும், அது சம்பந்தமாக போலிசார் கடைக்கு வந்து மேப் போட்டதாகவும், கடை விவரங்களை எழுதி கொண்டதாகவும், அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டதற்கு தானும், செல்லதுரையும் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையொப்பம் செய்ததாகவும் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு ஒத்துப் போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

23) மேலும் அ.சா.3 ன் குறுக்கு விசாரணையில் கையொப்பம் செய்த ஆவணத்தில் உள்ள விவரம் தெரியும் என்றும், படம் வரைந்ததில் கையொப்பம் செய்தேன் என்றும், அந்த இடம் ஒர்ஷாப் பழனி ரோட்டில் உள்ளது என்று சொன்னேன் என்றும், தானும் தனது நண்பர் செல்லதுரையும் கையொப்பம் போட்டோம் என்றும் எப்போது கையொப்பம் செய்தோம் என்றால் 21 ஆம் தேதி டை என்ன என்று சரியாக தெரியவில்லை என்றும், தனது முதல் விசாரணைக்கும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கும் ஒத்துப் போகும் வகையில் கூறியுள்ளார். மேலும் போலிசார் உங்களை விசாரிக்கவில்லை என்றால் ஆமாம் என்று கூறியிருப்பினும், மற்ற விபரங்கள் குறித்து அறுதியிட்டு கூறியுள்ள நிலையில் மேற்படி முரண்பாடு சிறிய முரண்பாடாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

24) மேற்படி இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 ஆனவரின் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் பார்வை மகசரில் 2 வது பேராவில் 10 வது லைனில் திருத்தப்பட்டு சுமார் 65 அடி தூரத்தில் என்றுள்ளது என்றால் சரிதான், வரைபடத்தில் சம்பவ இடத்திலிருந்து சுமார் 65 அடியில் சென்டர் மீடியசன் டவர் லைட் உள்ளது என்றுள்ள நிலையில் அ.சா.ஆ.3 ஆன பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.7 ஆன மாதிரி வரைபடம் ஆகிய ஆவணங்களில் சென்டர் மீடியசன் டவர் லைட் 65 அடி என்றும், 50 அடி என்று முரண்பட்டு காட்டப்பட்டுள்ளது என்பதும் மேற்படி ஆவணங்களை பரிசீலிக்கையில்

தெரியவருகிற நிலையில், மேற்படி முரண்பாடால் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றத்தின் தன்மையை மாற்றும் வகையில் அமையாதவை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

25) மேலும் அ.சா.5 ஆன மணிமேகலை என்பவரின் குறுக்கு விசாரணையில் புகார் 6 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், முதல் தகவல் அறிக்கை ஒரு நாள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், கால தாமதம் குறித்து விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் வாதி அக்கம் பக்கம் தேடிப்பார்த்து விட்டு வந்து புகார் கொடுத்ததால் தாமதம் ஆனது என்று சொன்னார என்றும், மேற்படி யார் யாரிடம் கேட்டார் என்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் சரிதான் என்றும் கேட்டு தெரிந்தவர்களை சாட்சியாக வழக்கில் போட்டுள்ளோம் என்றும் கூறியுள்ள நிலையில், அ.சா.1ன் முதல் விசாரணையில் மேற்படி வாகனம் காணவில்லை என்பதால் எதிரியானவர் தான் லோக்கல் என்று சொன்னதால் கடையில் உள்ள நபர்களை வைத்து தேடியதாகவும், மறுநாள் அவரது ஊர் பெரிய கோட்டை பிரிவு என்று தகவல் கிடைத்து, அவர் வீட்டிற்கு சென்று விசாரித்த போது சிவக்குமார் வீட்டிற்கு வருவதில்லை என்று கூறியதனால் அக்கம் பக்கம் தேடிவிட்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாக கூறியுள்ளார். மேலும் அ.சா.1ன் குறுக்கு விசாரணையிலும் புகார் 6 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றும், முதல் விசாரணையில் தேடி பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் யார் யாரிடம் எங்கு எங்கு சென்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அவர் வீட்டில் அவர் அம்மாவிடம் கேட்ட போது அவர் வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னார்கள் என்றும், மேற்கூறிய சங்கதியை புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன் என்றும் கூறியுள்ளார்.

26) இந்நிலையில் அ.சா.ஆ.1 ஆன புகாரினைப் பரிசீலிக்கையில் தனது கடையில் வேலை செய்யும் நவீன் என்பவர் மேற்படி வானத்தை சிவக்குமார்

என்பவர் எடுத்துச் சென்றார் என்று சொன்னதாகவும், அதன் பின்பு உடுமலை டவுன் முழுவதும் தேடியும் விசாரித்தும் பார்த்தும் எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும், இன்று வரை தேடியும் மேற்படி நபரையும் வாகனத்தையும் கண்டுபிடிக்க முடியாததால் போலிசில் புகார் கொடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

27) மேலும் அ.சா.2 ஆனவரும் பல்சர் NS-160 TN 78 S 9225 வாகனத்தை எடுத்து, ஓட்டிப் பார்ப்பதாக சொல்லி கேட்டதாகவும், 10 நிமிடம் காத்திருந்தபோதும் அவர் வரவில்லை, பின்னர் அவர் லோக்கல் என்று சொன்னதால் கடையில் உள்ள நபர்களை வைத்து தேடியதாகவும், மறுநாள் அவரது ஊர் பெரிய கோட்டை பிரிவு என்று தகவல் கிடைத்து, அவர் வீட்டிற்கு சென்று விசாரித்த போது சிவக்குமார் வீட்டிற்கு வருவதில்லை என்று கூறியதாகவும், அதன் பிறகு 21ம் தேதி கடையின் உரிமையாளர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தீர்கள் என்றால் காலை 8.45 மணிக்கு என்றும், யார் யார் சென்றீர்கள் என்றால் நானும் ஓனரும் சென்றோம் என்றும், புகாரை ஓனர் சொல்ல சொல்ல நான் எழுதினேன் என்றும், எனக்கு தெரியாது என்றும் அவர் சொல்ல சொல்ல எழுதினேன் என்றும் கூறியுள்ளார். எனவே மேற்படி கால தாமதம் குறித்து அரசு தரப்பில் கூறியுள்ள விளக்கங்கள் ஏற்புடையதாக உள்ளது.

28) இந்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2017 (1)MWN (Cr) 29 SC Yogesh Singh Vs Mahabeer Singh and others என்ற வழக்கில்

> "CRIMINAL PROCEDURE CODE, 1973 (2 of 1974) Section 157- First Information Report - Delay in forwarding FIR to Court - Effect- In terms of Section 157, Police required to forward copy of FIR to Magistrate promptly without any delay - However, merely because of delay in sending FIR to Magistrate, Prosecution case would not become unreliable vitiating trial itself in all cases - In absence of any prejudice to Accused or any other infirmity,

Prosecution case would not become unreliable – In instant case, no case of Accused that they have been prejudiced by alleged delay in dispatch of FIR to Magistrate – Delay, held, of no consequence"

என்று வழங்கிய சட்ட முன்தீர்ப்பின் விளக்கத்தினையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது. எனவே மேற்படி கால தாமதமானது எவ்வகையில் எதிரிக்கு பாதிப்பை ஏற்படுத்தியது என்பது குறித்து எதிரி தரப்பில் விளக்காததால் மேற்படி காலதாமதம் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக கருத இயலாது.

29) எனவே, இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆனவர்களின் குறுக்கு விசாரணை அவர்களின் முதன்மை சாட்சியத்தை குலைக்கும் வகையில் அமையாத சூழ்நிலையிலும், பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ஆனவர் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு ஒத்துபோகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளதும், அதற்கு வலவூட்டும் வகையில் அ.சா.ஆ.3 ஆன பார்வை மகசரும், அ.சா.ஆ.7 ஆன மாதிரி வரைபடமும் அமைந்துள்ளதும் தெரியவருகிறது. ஆகையினால், மேற்கண்ட விவாதங்களில் இருந்தும், சாட்சிய சான்றாவணங்களில் இருந்தும், இவ்வழக்கின் சம்பவ தேதி, நேரம், இடத்தை பொறுத்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

30) இந்நிலையில், இவ்வழக்கில் எதிரிகளின் அடையாளம் மற்றும் குற்றச் செயல்களைப் பொறுத்து பரிசீலிக்கையில், அ.சா.ஆ.1 ஆன புகாரினைப் பரிசீலிக்கையில் மேற்படி சம்பவ தினத்தில் தனது கடையில் இருந்த போது கடைக்கு வந்த பச்சை கலர் டீ சர்ட் மற்றும் கருப்பு கலர் ஜீன்ஸ் போட்ட சுமார் 30 வயது மதிக்கத்தக்க நபர் தான் லோக்கல் தான் என்றும், தனது பெயர் சிவக்குமார் என்றும், இருசக்கர வாகனம் பார்க்க வந்ததாக சொன்னதாகவும், தான் வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்துக் கொண்டிருந்ததால் வெயிட் பண்ணுபா என்று சொல்லிவிட்டு சென்றதாகவும், வேறொரு வாடிக்கையாளருக்கு இருசக்கர வாகனத்தை விலை பேசிக்கொண்டிருந்த போது விலை பேசி முடித்துவிட்டு சுமார் 10 நிமிடம் கழித்து வந்து பார்த்தபோது, சிவக்குமார் என்ற நபர் அங்கு

இல்லை என்றும், பின்பு கடையில் வேலை செய்யும் நவீன் மேற்படி நபர் விற்பனைக்காக கடைக்கு முன்பாக சாவியுடன் நிறுத்தி வைத்திருந்த TN 78 S 9225 என்ற எண்ணுள்ள கருப்பு சிவப்பு கலர் பஜாஜ் பல்சர் NS–160 வாகனத்தை ஓட்டிச் சென்றதாக சொன்னார் என்றும் கூறியுள்ளார்.

31) அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் எதிரியின் அடையாளத்தைப் பொறுத்து உங்களுடைய புகாரிலும் வாக்குமூலத்திலும் எதிரியின் அடையாளம் பற்றி வாதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் டிரஸ்கோடு மட்டும் சொன்னார் அங்க அடையாளத்தை பற்றி சொல்லவில்லை என்றும் கூறியுள்ள நிலையில், அரசு தரப்பு சாட்சியங்களைப் பரிசீலிக்கையில் அ.சா.1 ஆனவர் தனது முதன்மை சாட்சியத்தில் மேற்படி சம்பவ தினத்தில் தனது கடைக்கு மஞ்சள் கலர் சட்டை அணிந்து கருப்பு கலர் ஜீன்ஸ் அணிந்து வந்த ஒரு நபர் வண்டி வேண்டும் என்று கூறியதாகவும், அப்போது வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருந்ததால் காத்திருக்குமாறு கூறியதாகவும், பின்னர் 10 நிமிடம் கழித்து மேலாளர் நவின் என்பவர் தன்னிடம் வந்து அந்த நபர் பல்சர் NS 160 வாகனத்தை எடுத்து செல்வதாகவும் வண்டி பேசி விட்டிர்களா என்று கேட்டதாக கூறியதாகவும், தான் பேசவில்லை, வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருந்ததால் 10 நிமிடம் காத்திருக்க சொன்னதாகவும், பல்சர் NS 160 வாகனத்தின் எண் TN 78 S 9225 என்றும், பார்ட்டி வந்தால் காண்பிப்பதற்காக சாவி வண்டியிலேயே இருந்தது என்றும், அந்த நபர் லோக்கல் என்றும், பெயர் சிவக்குமார் என்றும் கூறியதாகவும் ஏற்கனேவே நண்பர்களுடன் ஒரு சில மாதங்களுக்கு முன் கடைக்கு வந்திருந்தார் என்றும், பின்பு மேற்படி வாகனத்தை தேடிவிட்டு கிடைக்காததால் புகார் கொடுத்ததாகவும் கூறியுள்ளார்.

32) மேலும் அ.சா.1 ஆனவர் பின்னிட்டு போலிசார் வண்டி அடுத்த நாள் கிடைத்து விட்டதாக சொல்லியதாகவும், கடையில் இருந்து வந்து வண்டி எடுத்தவரை அடையாளம் காட்ட இயலும் என்றும், நீதிமன்றத்தில் ஆஜரான

எதிரி தான் என்றும், புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் தனது கடையில் இருந்து திருடி சென்ற வாகனம் என்றும் கூறியுள்ளார்.

33) இந்நிலையில் அ.சா.1 ஆனவரின் குறுக்கு விசாரணையில் உங்கள் புகாரிலும் முதல் விசாரணையிலும் எதிரி குறித்து குறிப்பிட்டு அடையாளம் குறித்து சொல்லவில்லை என்றால் அந்த நபர் ஏற்கனவே கடைக்கு வந்துள்ளதால் அவரை பற்றி கூறியுள்ளேன் என்றும், குறிப்பிட்டு அடையாளம் பற்றி தெரியும் என்றும் கூறியுள்ளார்.

34) மேலும் அ.சா.2 ஆனவர் தனது முதல் விசாரணையில் கடையின் உரிமையாளர் வேறு ஒரு வாடிக்கையாளரை பார்த்து கொண்டிருந்த போது வேறு அலுவலில் இருந்து கடைக்கு வந்த போது கடைக்கு வெளியே ஆஜர் எதிரி சிவக்குமார் நின்று கொண்டிருந்ததாகவும், பல்சர் NS–160 TN 78 S 9225 வாகனத்தை எடுத்து, ஓட்டிப் பார்ப்பதாக சொன்னதாகவும், பின்னர் உரிமையாளரிடம் போய் சொன்ன போது வேறு வாடிக்கையளாரை பார்த்து கொண்டிருப்பதாக 10 நிமிடம் காத்திருக்குமாறு கூறியதாகவும், ஆனால் அதற்குள் வண்டியை எடுத்து சென்று விட்டார் என்றும், 10 நிமிடம் காத்திருந்த போதும் அவர் வரவில்லை, ஆஜர் எதிரி லோக்கல் என்று சொன்னார், அந்த நபர் தன் பெயர் சிவக்குமார் என்று கூறினார், ஏற்கனேவே நண்பர்களுடன் ஒரு சில மாதங்களுக்கு முன் கடைக்கு வந்திருந்ததாகவும், இது குறித்து கடையின் உரிமையாளர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் கூறியுள்ளார். எனவே அ.சா.1 மற்றும் அசா.2 ஆனவர்கள் தங்களது சாட்சியங்களில் எதிரியின் அடையாளங்களைப் பொறுத்தும், குற்றச்சாட்டுக்களைப் பொறுத்தும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள்.

35) மேலும் புலன் விசாரணை அதிகாரியின் முதல் விசாரணையில் கடந்த 22.11.2015 ஆம் தேதியன்று உடுமலைப்பேட்டை – பழனி ரோடு குணா ஸ்ரீ லாட்ஜ் அருகில் வாகன தணிக்கையில் இருந்த போது இரு சக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் எங்களை பார்த்ததும் தப்பியோட முயற்சித்த வரை உடனிருந்த

போலீஸ் பார்ட்டியுடன் பிடித்து சுற்றி வளைத்து விசாரித்த போது தனது பெயர் சிவக்குமார் என்றும், பின்பு ஜெனியுன் ஆட்டோ கேர் கடையில் இருந்த வாகனத்தை திருடி சென்றதாக ஒப்புக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து அவர் திருடிச் சென்ற இரு சக்கர வாகனத்தை ஆஜர்படுத்தியதை படிவம் 91–ல் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறியுள்ளார்.

36) இதனைப் பொறுத்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.4 ஆன சிவக்குமார் என்பவர் தனது முதல் விசாரணையில் கடந்த 22.11.2015 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு தனது நண்பர் அன்பரசன் உடன் இரு சக்கர வாகனத்தில் குணா ஸ்ரீ லாட்ஜ் அருகில் வந்த போது போலீசார் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்து கொண்டிருந்ததாகவும், அப்போது ஒரு பல்சர் வாகனம் வேகமாக வந்து போலீசாரை பார்த்ததும் வேகமாக சென்றதை போலீசார் தடுத்து நிறுத்தி அந்த நபரிடம் ஆர்சி புக், இன்சூரன்ஸ், லைசன்ஸ் ஆகிய விவரங்களை கேட்டபோது அவர் தடுமாறி விட்டு அந்த வாகனத்தை திருடி கொண்டு வந்ததாக ஒப்புக்கொண்டதாகவும், அவர் பெயர் சிவக்குமார் பெரியகோட்டை பிரிவு என்று சொன்னதாகவும், அவர் ஆஜர் எதிரி தான் என்றும் கூறியுள்ளார். மேலும் அ.சா.4 ஆனவர் பின்னிட்டு போலீசார் எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து எதிரியிடம் கையொப்பம் பெற்றதாகவும், தானும் அன்பரசனும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், எதிரி நான்கு கையெழுத்து செய்தார் என்றும் கூறியுள்ளார்.

37) மேலும் அ.சா.4 ன் குறுக்கு விசாரணையில் கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியும் என்றும், 22 ஆம் தேதி குணா ஸ்ரீ லாட்ஜ் அருகில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றும், காலை சுமார் 08.30 முதல் 09.00 மணிக்குள் கையொப்பம் செய்தேன் என்றும், மேற்படி எதிரியானவர் சுமார் 09.00 மணிக்கு மேற்படி வாகனத்தை ஒப்படைத்தார் என்றும் புலன் விசாரணை

அதிகாரியின் சாட்சியத்திற்கும், தனது முதல் விசாரணைக்கும் ஒத்துப்போகும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

38) மேலும் எதிரி தரப்பில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து எங்கு சென்று பிரிண்ட் எடுக்கப்பட்டது என்பது குறித்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ள நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் எந்த கடையில் வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்று வழக்குக் கோப்பில் சொல்லவில்லை என்றால் காவல் நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில், ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.4 ஆனவர் தனது முதல் விசாரணையில் எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கேயே லேப்டாப்பில் தட்டச்சு செய்து, பென்டிரைவ் மூலமாக பிரவுசிங் சென்டருக்கு சென்று பிரின்ட்அவுட் எடுத்து வந்து கையொப்பம் பெற்றதாக சொல்லியுள்ள நிலையில், அ.சா.4 ன் குறுக்கு விசாரணையில் கடையில் பிரிண்ட் எடுத்ததாக சொல்லி உள்ள நிலையில் எந்த கடை என்றால் அது பற்றி தெரியாது போலீசார் பக்கத்து கடையில் சென்று பிரின்ட் எடுத்து வந்தார்கள் என்று புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்கு முரண்பட்டு கூறியிருப்பினும் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்பது குறித்தும் அதில் எதிரியும் அ.சா.4 ம், அவரது நண்பரும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்பது குறித்தும் ஆஜர் எதிரி தான் வாகனத்தை திருடி வந்ததாக ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்பது குறித்தும் அ.சா.4 ஆனவர் குறிப்பிட்டு சாட்சி அளத்துள்ள நிலையில், பிரிண்ட் எங்கு எடுக்கப்பட்டது என்பது குறித்து முரண்பட்ட சாட்சியம் அளித்துள்ளதாலேயே இவ்வழக்கை முற்றிலும் நிராகரிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

39) இந்நிலையில் எதிரி தரப்பில் பொதுவாக வண்டி நிறுத்தும்போது வண்டியின் சாவியை பூட்டித்தான் நிறுத்துவார்கள் என்று முன்மொழியப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கின் அ.சா.6 ஆன புலன்

விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் வாடிக்கையாளர் வரும்போது சாவியை எடுத்து வர வேண்டும் என்பதால் கன்சல்டிங் கடை என்பதால் வண்டியை சாவியுடன் தான் வைத்திருப்பார்கள் என்றும் கூறியுள்ள நிலையில், இது குறித்து அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் பொதுவாக வண்டி நிறுத்தும்போது சாவியை பூட்டித்தான் நிறுத்துவார்கள் என்றால் கஸ்டமர் வந்து பார்ப்பதால் எப்போதும் சாவியுடன் தான் இருக்கும், ஒவ்வொரு முறையும் சாவியைக் கொண்டு வர இயலாது என்றும் 40-50 வண்டியை நிறுத்தி இருப்பதால் சாவியுடன் நிறுத்தி இருப்பேன் என்று கூறியுள்ளார்.

40) மேலும் அ.சா.2ம் அவரது குறுக்கு விசாரணையில் பொதுவாக பைக் நிறுத்தினால் சாவியை பூட்டு போட்டு தான் சாவி வந்து நம்ம கஷ்டடியில் வைத்திருப்போம் என்றால் பைக் நிறுத்தி சாவியை நாங்கள் வைத்திருந்தோம் என்றும் கூறி, பின்னிட்டு பைக்கில் சாவியுடன் தான் வைத்திருந்தோம் என்று கூறியுள்ளார். ஆகையினால் மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலித்து பார்க்கும்போது வழக்கின் புகார்தாரர் பழைய இருசக்கர வாகனங்களை வாங்கி விற்கும் கன்சல்டிங் கடை வைத்துள்ளார் என்பது தெரியவருகிற நிலையில் மேற்படி கடையில் உள்ள வாகனத்தை சாவியுடன் தான் நிறுத்தி வைக்கப்பட்டது என்பதை பொறுத்து ஒருவருக்கொருவர் ஒத்துப்போகும் வகையில் சாட்சியமளித்துள்ள நிலையில் பொதுவாக வண்டி நிறுத்தும்போது வண்டியின் சாவியை பூட்டித்தான் நிறுத்துவார்கள் என்ற எதிரி தரப்பு வாதம் இவ்வழககின் சூழ்நிலைக்கு பொருந்தாததால் மேற்படி வாதம் நிராகரிக்கப்படுகிறது.

41) மேலும் எதிரி தரப்பில் ஆர்.டி.ஓ. சட்டப்படி வண்டி வைத்துள்ளவர்களின் பெயரில் வாகனத்தின் ஆவணங்கள் இருக்க வேண்டும் என்றும், வழக்கில் சொல்லியுள்ள வாகனம் வாதியின் பெயரில் உள்ளதா என்பது குறித்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ள நிலையில் அ.சா6 புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் ஆர்சி புக்கில் வாதியின் பெயர் இல்லை என்றும் சசிகுமார் பெயரில் தான் உள்ளது என்றும், கன்சல்டிங் வேலை செய்து

வருவதால் பழைய ஓனர் பெயரில் உள்ளது, இது வரையில் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றும், ஆர்.டி.ஓ. சட்டப்படி வண்டி அவர்கள் பெயரில் இருக்க வேண்டும் என்றால் சொந்த பயன்பாட்டிற்காக வாங்கும் போது அப்படி செய்ய வேண்டும், இங்கு கன்சல்டிங் விற்பனை செய்வதால் பார்ம் 32 ஆகியவற்றை மட்டும் பெற்றுள்ளார் என்று கூறியுள்ளார்.

42) மேலும் இதனைப் பொறுத்து அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் வண்டி யார் பெயரில் உள்ளது என்றால் அப்போது தான் வண்டியை எடுத்தோம், யார் பெயருக்கு சேல்ஸ் செய்கிறோமோ அவர் பெயருக்கு பின்னர் மாற்றப்படும் என்றும், வண்டியை சேல்ஸ் செய்த பின்னிட்டு பெயர் மாற்றம் செய்யப்படும் என்றும், வழக்குச் சொத்தான வண்டி தனது பெயரில் இல்லை என்றும் கூறியுள்ளார். பின்னிட்ட விசாரணையில் வண்டி புக் உங்கள் வசம் இல்லை என்றால் வண்டி புக், ஆர்சி புக், வாடிக்கையாளர் கையொப்பம் டியூ பார்ம் என் வசம் உள்ளது, சேல்ஸ் எடுக்கும் போது அனைத்து ஆவணங்களையும் வைத்திருப்போம் என்றும், டியூ பார்ம் போலீசார் விசாரணையின் போது கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்று கூறி, பின்னிட்டு வண்டியை திரும்பப் பெரும் சமயத்தில் ஜெராக்ஸ் கொடுத்துள்ளேன் என்றும், மேற்படி வண்டியின் பார்ம் 29, 30 போலீசாரிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் நகல் கொடுத்துள்ளேன் என்றும் கூறியுள்ளார்.

43) ஆகையினால் மேற்கண்ட சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது வழக்குச் சொத்தான இருசக்கர வாகனம் புகாரதாரருக்கு சொந்தமானது என்பதும், கன்சல்டிங் கடை என்பதால் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பின்னர் தான் அவர்களது பெயருக்கு வாகனத்தின் ஆவணங்கள் மாற்றம் செய்து தரப்படும் என்பதும் தெரிய வருகிற நிலையில், புகார்தாரரின் பெயரில் வாகனத்தின் உரிமை மாற்றம் சான்றிதழ் இல்லை என்பது தெரியவரினும் இவ்வழக்கின் புகார்தாரர் இவ்வழக்குச் சொத்தான மேற்படி வாகனத்தை தன்வசம் வைத்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

44) மேலும் எதிரி தரப்பில் அ.சா.2 நவீன் பாபு மற்றும் அ.சா.3 ஜனார்த்தனன் மற்றும் அனைத்து சாட்சியங்களின் 180(3) வாக்குமூலத்தில் 10 வது லைனில் வாதியின் பெயரும் மற்றும் 15 வது லைனில் எதிரியின் பெயரும் சிவக்குமார் என்றுள்ளது என்பது குறித்து முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் மேற்படி வாதியின் பெயரும் எதிரியின் பெயரும் சிவக்குமார் என்றுள்ளது என்றால் தட்டச்சு செய்யும் போது பிழையாக இருக்கும் என்று கூறியுள்ள நிலையில், இது குறித்து புகார்தாரர் அ.சா.1 ஆனவரிடம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

45) மேலும் அ.சா.2 ன் குறுக்கு விசாரணையில் உங்களது போலீசார் விசாரணையில் உங்களுடைய உரிமையாளர் பெயர் சிவக்குமார் என்று சொல்லி இருந்தால் அது தவறு என்றால் செல்வகுமார் என்று சொன்னேன், அவர்கள் டைப் செய்யும் போது சிவக்குமார் என்று டைப் செய்து விட்டார்கள் என்று கூறியுள்ள நிலையில், வாதியின் பெயர் மற்றும் எதிரியின் பெயர் சிவக்குமார் என்று காட்டப்பட்டுள்ளதாக எதிரி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முரண்பாடு இவ்வழக்கின் தன்மையை மாற்றும் வகையில் அமையாததால் மேற்படி முரண்பாடானது தட்டச்சு பிழையாகவே நீதிமன்றம் கருதுகிறது.

46) மேலும் எதிரி தரப்பில் சம்பவ இடத்தில் சிசிடிவி கேமரா இருந்தது என்றும், கேமரா பதிவுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்பது குறித்தும் கேள்விகள் கேட்கப்பட்டுள்ள நிலையில், அ.சா.6 ஆன புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையில் சம்பவ இடத்தில் கேமரா இருந்ததாக தெரிந்து கொண்டீர்களா என்றால் கடையின் முன்பு கேமரா இருந்தது என்றும், மேற்படி சிசிடிவி கேமரா பதிவுகளை தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் வாதிக்கு எதிரியை அடையாளம் தெரியும் என்பதால் பதிவுகளை பார்க்கவில்லை என்றும், மேற்படி கேமரா பதிவுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொல்லியுள்ள நிலையில், அ.சா.2 ன் குறுக்கு விசாரணையில் தான்

வேலை செய்யும் கடையில் சிசிடிவி கேமரா உள்ளது என்றும், அந்த சிசிடிவி கேமரா பதிவுகளை போலீசார் வசம் ஒப்படைத்தீர்களா என்றால் எனக்குத் தெரியாது, அது பற்றி ஓனருக்கு தான் தெரியும் என்று சொல்லியுள்ள நிலையில், அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் கடையில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் உள்ளது, சரியாக வேலை செய்யாது என்றும் கடையில் சிசிடிவி கேமரா வேலை செய்யாது என்று போலீசார் விசாரணை சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும் சொல்லியுள்ளார்.

47) ஆகவே, மேற்படி கடையில் சிசிடிவி கேமரா இருந்துள்ளது என்பது மேற்படி சாட்சிகள் மூலம் தெரியவருகிறது. மேலும் மேற்படி சிசிடிவி கேமராவானது சரியாக வேலை செய்யவில்லை என்பது அ.சா.1ன் குறுக்கு விசாரணை மூலம் தெரிய வருகிற நிலையில், எதிரியின் அடையாளம் மற்றும் குற்றச் செயல்கள் குறித்து அ.சா.1, அ.சா.2 மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.4 ஆனவர்கள் குறிப்பிட்டு சாட்சி அளித்துள்ள நிலையில், மேற்படி சிசிடிவி கேமரா பதிவுகள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலேயே இவ்வழக்கை முற்றிலும் நிராகரிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

48) ஆகையினால் மேற்கண்ட விவாதங்களில் இருந்து சாட்சிய சாண்றாவணங்களின் இருந்தும், இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆனவர்களின் சாட்சியம் ஒருவருக்கொருவர் ஒத்துபோகும் வகையில் அமைந்துள்ள நிலையில் அவர்களது சாட்சியத்தின் நம்பகத்தன்மையை குலைக்கும் வகையில் எதிரி தரப்பின் குறுக்கு விசாரணை அமையாத சூழ்நிலையில், இவர்களது சாட்சியத்திற்கு வலுபூட்டும் வகையில் இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.4 ஆனவரின் சாட்சியமும் அ.சா.6 ஆன புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியமும் அமைந்துள்ள சூழ்நிலையிலும், இவ்வழக்கில் எதிரி மீது சுமதப்பட்டப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவுகள் 303(2)-ன் கீழான குற்றச்சாட்டைப் பொறுத்து அரசு தரப்பானது

சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

49) மேலும் எதிரி பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவுகள் 303(2)–ன் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானித்த நிலையில் எதிரிக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை பற்றி பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023, பிரிவு 271(2)–ன் கீழ் வினவியபோது அவர்கள் பின்வருமாறு கூறினார்.

<u>**குற்றஞ்சாட்டப்பட்ட எதிரியின் பதில்**</u>

**"குழந்தைகள் Hostel–ல் உள்ளார்கள், குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு வேண்டுகிறேன்"**

50) இவ்வழக்கில் குற்றத்தின் தன்மை மற்றும் குற்றச் சூழ்நிலையை கருத்திற்கொண்டு எதிரி நன்னடத்தை சட்டத்தின்கீழ் பலன்கள் பெற தகுதியற்றவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

51) மேலும், மேற்கண்ட குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் பதிலை கருத்திற்கொண்டும் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் வயது, குடும்ப சூழ்நிலையை கருத்திற்கொண்டும் எதிரியின் உடல்நிலையை கருத்திற்கொண்டும் தண்டனையில் பரிசீலிக்கப்படலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

52) முடிவாக எதிரி மீது பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவுகள் 303(2)–ன் கீழ் வனையப்பட்ட குற்றத்திற்கு குறைந்தபட்ச தண்டனையாக ஆறு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும் எதிரியானவர் சிறைச்சாலையில் உள்ளதை கருத்திற்கொண்டும் அபராதம் விதிக்கப்படாமலும் இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்கண்ட

தண்டனை தீர்ப்பானது, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 271(2)–கீழ் வழங்கப்படுகிறது. மேலும் பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 468–ன் கீழ் இவ்வழக்கின் எதிரியானவர் 22.11.2025 ஆம் தேதி முதல் 09.03.2026 வரை (108 நாட்கள்) சிறையில் இருந்த காலத்தினை தண்டனைக் காலத்தில் கழித்துக் கொள்ளவும் இந்நீதிமன்றம் உத்திரவிடுகிறது.

53) மேலும், இவ்வழக்கில் TN 78 S 9225 Bajaj Pulsar இருசக்கர வாகனம்–1 கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் P.R.No.364/2025–ஆக ஒப்படைக்கப்பட்டுள்ளதை அதன் உரிமையார் இந்நீதிமன்றத்தில் 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளுமாறு உத்திரவிடப்படுகிறது மேலும் இவ்வழக்கானது மேல் முறையீடு செய்யும்பட்சத்தில் மாண்புமிகு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க செயல்படவும் உத்திரவிடப்படுகிறது.

**Particulars under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| S. No | Description of the accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Cr.No | Name of the Police Station | Name | Father's Name | Occupation | Residency | Age |
| 1. | 729/2025 | Udumalpet | Sivakumar | Kannan | Labourer | 14/334, J.J.Nagar, Periyakottai Pirivu, Udumalpet Tk, Tiruppur Dt. | 28/2025 |

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension | Release on Bail | Commitment | Commencement of Trial | Close of Trial | Sentence or Order | Service of copy of Judgment on accused | Explanation of Delay |
| 15.11.2025 | 21.11.2025 | 22.11.2025 | 09.03.2026 | Not applicable | 02.03.2026 | 04.03.2026 | 09.03.2026 | Nil | No Delay |

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்க நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாளாகிய இன்று இவ்வவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.09 16:47:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

**இணைப்பு :–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 02.03.2026 | செல்வக்குமார் (புகார்தாரர்) |
| அ.சா.2 | 02.03.2026 | நவின் பிரபு (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | 02.03.2026 | ஜனார்த்தனன் (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.4 | 02.03.2026 | சிவக்குமார் (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி) |
| அ.சா.5 | 04.03.2026 | மணிமேகலை (தலைமைக் காவலர்) |
| அ.சா.6 | 04.03.2026 | கோபால் (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | அ.சா.1 | புகார் |
| அ.சா.ஆ.2. | அ.சா.2 | வாகனத்தின் புகைப்படம் |
| அ.சா.ஆ.3 | அ.சா.3 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | அ.சா.4 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | அ.சா.4 | படிவம் 91 |
| அ.சா.ஆ.6 | அ.சா.5 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | அ.சா.6 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | அ.சா.6 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டப் பகுதி |

**எதிரி தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணம் :–** இல்லை

**அரசு தரப்பு சான்று பொருள் :–** இல்லை

<u>குறிப்பு :–</u>

1. எதிரி பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 271(2)–ன் கீழ் தண்டிக்கப்படுகிறார்.
2. தீர்ப்பின் நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.
3. எந்த சாட்சியும் 3 வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு மற்றும் சிறைச்சாலைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
5. குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சிறையிலிருந்த காலத்தினை பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 468–ன் படி மேற்கண்ட தண்டனைக் காலத்திலிருந்து (Set off) கழித்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.09 16:47:30 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பூர்
<u>அவர்களுக்கு</u>